ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1988/25 - 2016 ඔක්තෝබර් මස 14 වැනි සිකුරාදා - 2016.10.14

*1988/25 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு**

சிவில் விமான சேவை அதிகார சபை

***196 விமானப் போக்குவரத்து கோவையின் கீழ் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் அறிவித்தல்***

உள்ளக வாடகைச் செயற்பாட்டு விமானப் போக்குவரத்து சேவை (Domestic- Charter Operation) விமானத்தில் மேற்கொள்ளப்படும் பணிகள் (Aerial Work Operation) மற்றும் உள்ளக முறையான விமானப் போக்குவரத்து சேவை (Domestic- Regular Public Transport Operation) நாட்டில் முன்னெடுப்பதற்காக சிவில் விமான சேவைச் சட்டம் மற்றும் அதற்குரிய கோவைகள் நிபந்தனைகளுக்கமைய விமானச் செயற்பாட்டுச் சான்றிதழ் மற்றும் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக கொழும்பு 05, கிருளப்பன வீதி, இலக்கம் 121/3 இல் அமைந்துள்ள சகுராய் அவியேஷன் லிமிட்டெட் கம்பனியினால் 2016, யூலை மாதம் 05 ஆந் திகதிய விண்ணப்பப்படிவம் 2016, செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி இவ் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பப்படிவத்திற்கமைய சகுராய் அவியேஷன் லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபை கீழ் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.

திரு. மல்பே கமயத்தி ரால்லாகே அசங்க பரகாத் யசவர்தன
திரு. கபுஆராச்சிகே தொல்நிமல் ஜயந்த
திரு. வர்ணகுலசூரிய றொசான் மாலிந்த பார்னாந்து.

இக்கம்பனியின் உத்தேச சிவில் விமான செயற்பாட்டுப் பணிகள் தொடர்பான முழுமையான பொறுப்பு முகாமைத்துவத்திற்காக தரங்க சரத்சந்திர பியவம்ச அவர்கள் சகுராய் அவியேஷன் லிமிட்டெட்டினால் பெயரிடப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரியின் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி கொழும்பு 02, ஹுணுபிட்டிய வீதி, இலக்கம் 04, சிவில் விமான சேவை அதிகார சபையின் கீழ் மாடியில் அமைந்துள்ள தொழில்நுட்ப நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. எந்தவொரு வேலைத்தினங்களிலும் அலுவலக நேரத்திற்குள் பொதுமக்களுக்கு இதனைப் பார்வையிட முடியும்.

உத்தேச செயற்பாடுகளுக்காகத் தேவையான விமான செயற்பாட்டுச் சான்றிதழ் (Air Operator Certificate) உட்பட ஏனைய உரிய அங்கீகாரங்களை வழங்க முன்னர் சிவில் விமான சேவைச் சட்டம் விமானப் போக்குவரத்துக் கோவையினைப் போன்று உரிய சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரைச் செயற்பாடுகள் (International Standard and Recommended Practices) மற்றும் இந்நிறுவனத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அதனுடன் தொடர்புபட்ட உள்நாட்டுத் தேவைகளுக்கமைய பாதுகாப்பு, நம்பகத்தன்மை கொண்ட வினைத்திறன்மிக்க விமானப் போக்குவரத்துச் செயற்பாட்டினை மேற்கொள்வதற்காக விண்ணப்பதாரியின் தகைமைகளை நிலையியற் சபை செயற்பாடுகளுக்கமைய உரியவாறு பரிசோதனை செய்து இவ்விண்ணப்பப்படிவத்தை உறுதிப்படுத்தும் வேலைத்திட்டங்களின் 2016, நவெம்பர் மாதம் 07 ஆந் திகதிக்குப் பின்னர் என்னால் ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

மேற்கூறப்பட்ட வாசகம் குறிப்பிடப்பட்ட தினத்திற்கு 10 நாட்களுக்கு முன்னர் எந்த நபருக்கும் மேற்கூறப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பில் எழுத்துமூல, உரிய காரணங்களை அடிப்படையாகக் கொண்ட விடயங்கள், விமானப் போக்குவரத்துக் கோவைகளுக்கமைய எனக்கு அறிவிக்க முடியும், உள்ளடக்கத்தின் சகல வெளிப்பாடுகளிலும் உண்மைத்தன்மை எழுத்து மூலச் சாட்சிகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறான விஞ்ஞாபனங்கள் எனக்குச் சமர்ப்பிக்கப்படும் வேளையில் அவரினால் அதன் பிரதியை விண்ணப்பதாரிக்கு கிடைக்கச் செய்ய வேண்டியதுடன் அவ்வாறு அனுப்பப்பட்டதான சான்றிதழ் உரிய விஞ்ஞாபனத்தில் இணைந்திருக்க வேண்டும்.

எச். எம். சீ. நிமல்சிறி,
சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும்
பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்.

இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை,
இல. 04, ஹுணுபிட்டிய வீதி,
கொழும்பு 02,
2016, ஒற்றோபர் 14.

10- 1669

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.